Dhinathdhalam@gmail.com

www.dhinathdhalam.com

விளம்பரதாரர்கள் தேவை

தமிழகம் முழுவதும் 234 சட்டமன்ற தொகுதிகளுக்கும் செய்தி – விளம்பரம் சேகரிக்க முழு நேர – பகுதி நேர பணிக்கு தகுந்த ஆட்கள் தேவை.

☎ 9 111 222 654

# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

DHINATH DHALAM Tamil & English daily Paper

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D.,

நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

செய்தியாளர்கள் தேவை




தமிழகம் முழுவதும் மாவட்டம் & தாலுகா வாரியாக சந்தாதாரர் அடிப்படையில் ஆண்/பெண் நிருபர்கள் தேவை

☎ 94440 82959

மலர் Volume : 01 | இதழ் Issue : 023 | வியாழக்கிழமை Thursday | 23.04.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode

## விழிப்புடன் இருப்பது அவசியம்: திமுகவினருக்கு முதலமைச்சர் ஸ்டாலின் கடிதம்



சென்னை: திமுக தலைவரும், தமிழ்நாட்டின்முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின், திமுக தொண்டர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார். "வாக்குச்சாவடி முகவர்கள் நாளை வாக்குப்பதிவு நடைபெறுவதற்கு 90 நிமிடங்களுக்குமுன்பாகவே வாக்குச்சாவடிக்கு செல்ல வேண்டும்." என முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார். "வெற்றிநிச்சயம்,விழிப்புடன் இருப்பது அவசியம்" என்ற தலைப்பில் முதல்வர் ஸ்டாலின் எழுதியுள்ள அக்கடிதத்தில், திராவிட மாடல் 2.0 ஆட்சி அமையவேண்டும் என உங்களில் ஒருவனான நான் நினைப்பதைவிடவும், அன்பு உடன்பிறப்புகளான நீங்கள் நினைப்பதை விடவும், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியின் கொள்கைவழித் தோழமைக் கட்சிகள் எதிர்பார்ப்பதைவிடவும் தமிழ்நாட்டு மக்கள் மிகுந்த எதிர்பார்ப்புடன் உள்ளனர். 5 ஆண்டுகால திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் பயன் தந்திருப்பதாலும், பாஜக தலைமையில் அதிமுக மற்றும் சில கட்சிகள் இணைந்துள்ள தேசிய ஜனநாயக கூட்டணியால், அதன் ஒன்றிய அரசால், தமிழ்நாடு தொடர்ந்து வஞ்சிக்கப்படுவதாலும், அடிமை அ.தி.மு.க.வுக்கும் அதனுடன் உள்ள கட்சிகளுக்கும் வாக்களித்தால் அது நேரடியாக பாஜகவுக்கு போடும் வாக்குதான் என்பதை உணர்ந்திருப்பதாலும், பீகாரைப் போல தமிழ்நாட்டையும் பா.ஜ.க பின்வாசல் வழியாக கபளீகரம் செய்துவிடும் என்பதாலும், பாஜக தலைமையில் அதிமுக இணைந்துள்ள கூட்டணியை முறியடித்து, திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கே வாக்களிப்போம் என்பதே தமிழ்நாட்டு வாக்காளர்களின் உறுதியான முடிவு.

மக்கள் நம்முடன் இருக்கிறார்கள். தமிழ்நாட்டின் எதிரிகளுக்கும் அவர்களின் அடிமைகளுக்கும் இங்கே இடமில்லை என்பதில் உறுதியாக இருக்கிறார்கள். நம் உயிர்நிகர் தலைவர் கலைஞரின் திருவாரூரில் மார்ச் 31 அன்று தேர்தல் பரப்புரையைத் தொடங்கினேன். ஏப்ரல் 21அன்று உங்களில் ஒருவனான நான் போட்டியிடும் என் கொளத்தூர் தொகுதியில் பரப்புரையை நிறைவு செய்திருக்கிறேன். தேர்தல் பிரச்சாரப் பொதுக்கூட்டங்கள் மட்டுமின்றி, அந்தக்கூட்டங்கள் நடக்கின்ற ஊரில் காலை நேர நடைப்பயணத்துடன் பொதுமக்களுடனான சந்திப்பு - கலந்துரையாடல், சாலை வலம் உள்ளிட்ட அனைத்தையும் சேர்த்தால் தமிழ்நாட்டின் நீள அகலத்தின் பரப்புக்கு இணையாக உங்களில் ஒருவனான என்னுடைய பயணமும் அமைந்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும், திராவிட மாடல் அரசின் முத்தாய்ப்புத் திட்டங்களான விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, காலை உணவுத் திட்டம், நான் முதல்வன், மக்களைத் தேடி மருத்துவம் போன்ற ஏராளமான திட்டங்களை மக்களே என்னிடம் எடுத்துச் சொன்னதுடன், 2026 திமுக தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றுள்ள மாதம் 2000 ரூபாய் உரிமைத் தொகை, இல்லத்தரசி திட்டத்தின் 8000 ரூபாய் கூப்பன், விவசாயிகளுக்கு மீட்டர் பொருத்தப்படாத நவீன மோட்டார் பம்பு, கல்லூரிகளின் செயற்கை நுண்ணறிவுக் கல்வி, நான் முதல்வன் திட்டத்தில் இளைய தலைமுறைக்கு திறன் பயிற்சியுடன், வேலை கிடைக்கும் வரை ஊக்கத் தொகைபோன்ற வாக்குறுதிகளையும் மக்களே நினைவுபடுத்தி வரவேற்று மகிழ்ந்தனர்.

நம்அரசியல் எதிரிகள் பரப்புகின்ற அவதூறுகளைத் தமிழ்நாட்டு மக்கள் புறந்தள்ளி, திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்திட வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளனர். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற கூட்டணிக்குத்தான் வாக்களிக்க வேண்டும் என்ற உறுதியையும் மேற்கொண்டுள்ளனர். தமிழ்நாடு முழுவதும் உள்ள கழக உடன்பிறப்புகள், தி.மு.க போட்டியிடும் தொகுதிகளிலும், தோழமைக் கட்சிகள் போட்டியிடும் தொகுதிகளிலும் கடுமையாக உழைக்கின்றனர். தோழமைக் கட்சியினரும் கழகம் போட்டியிடும் தொகுதிகளில் ஒருங்கிணைந்து பணியாற்றுகின்றனர். தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து வெளிப்பட்ட உடன்பிறப்புகளின் அயராத உழைப்பு, வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23-ஆம் தேதியன்றும் விழிப்புடன் தொடர்ந்திட வேண்டும். ஏறத்தாழ ஓராண்டுக்கு முன்பே தமிழ்நாட்டின் ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள அனைத்து வாக்குச்சாவடிக்கும் பாக நிலை முகவர்களை (BLA 2) நியமித்து, பத்து உறுப்பினர்களைக் கொண்ட பாகக் குழுக்களையும் (BLC) அமைத்து, அதில் இளைஞரணி, மகளிரணி நிர்வாகிகள் இடம்பெறச் செய்ததுடன், தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் டிஜிட்டல் பூத் ஏஜெண்ட் எனப்படும் BDA-க்களையும் நியமித்து ஒவ்வொரு பூத் வாரியாக தேர்தல் களப் பணியை மேற்கொண்டிருக்கிறது திராவிட முன்னேற்றக் கழகம்.

அத்துடன், ஓரணியில் தமிழ்நாடு செயல்பாட்டின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு தொகுதியிலும், ஒவ்வொரு வீட்டுக்கும் சென்று, மக்களை சந்தித்து அவர்களின் ஆதரவைப் பெற்று, அவற்றை டிஜிட்டல் முறையில் பதிவேற்றம் செய்துள்ளனர் கழக உடன்பிறப்புகள்.

## தமிழ்நாட்டில் 5,949 வாக்குசாவடிகள் பதற்றமானவை தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தகவல்




சென்னை : தமிழகத்தில் 5,949 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளதாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்தார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் வாக்குப்பதிவு நாளை நடைபெறும் நிலையில், ஏற்பாடுகள் தொடர்பாக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனாபட்நாயக் சென்னை தலைமை செயலகத்தில் இன்று செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது பேசிய அவர், தமிழகத்தில் 5,73,43,291 வாக்காளர்கள் உள்ளனர். இவர்களில் 14,59,093 பேர் முதல் முறை வாக்காளர்கள் ஆகும். இதுவரை 4.18 லட்சம் தபால் வாக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.தமிழக சட்டமன்றத் தேர்தலில் 1,06,418 வாக்குப்பதிவு இயந்திரங்கள், 75,064 கட்டுப்பாட்டு கருவிகள், 75,064 விவிபேட் இயந்திரங்கள் பயன்படுத்தபட உள்ளன.

75,064 வாக்குச்சாவடி மையங்கள், 33,133 இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன. 3 லட்சம் பேர் தேர்தல் பணியில் ஈடுபட உள்ளனர். 83 ஆயிரம் காவலர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். 300 கம்பெனி துணை ராணுவ படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர். 62 வாக்கு எண்ணிக்கை மையங்கள் மற்றும் 4 கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது முதல் 1,262 கோடி ரூபாய் ரொக்கம் மற்றும் பரிசுப் பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. சமூக வலைதளங்கள் பதிவுகள் தொடர்பாக 163 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. 2,180 இணைய லிங்க் முடக்கப்பட்டுள்ளது.

249 மாதிரி வாக்குச்சாவடி மையங்கள், 325 முழுமையாக பெண்கள் பணியாற்றும் வாக்குச்சாவடி மையங்கள், 71 மாற்றுத்திறனாளிகள் பணியாற்றும் வாக்குச்சாவடி மையம், 79 இளம் பணியாளர்கள் பணியாற்றும் வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சில இடங்களில் பசுமை வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டுள்ளது. மொத்தம் 3,025 இடங்களில் 5,949 வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என கண்டறியப்பட்டுள்ளன.

சிவிஜில் மூலம் 5,634 புகார்கள் வந்தன, கால் சென்டர் மூலம் 74,270 புகார்களும் வந்துள்ளன. இதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. வாக்காளர்களுக்கான வசதிகள்

வாக்காளர்கள் பல்வேறு தகல்களை தெரிந்து கொள்ள தேர்தல் வழிகாட்டி இணையதளம் ( https://voter-vazhikatti.tn.gov.in) உருவாக்கப்பட்டுள்ளது. வாக்களர்களுக்கு தேவையான வசதிகள் வாக்குச்சாவடிகளில் செய்யப்பட்டுள்ளன. வாக்குப்பதிவை அதிகரிக்க தேவையான அனைத்து நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது. வாக்குசாவடி உள்ளே மொபைல் கொண்டு செல்லக் கூடாது, மொபைல் போன்களை வாக்குச்சாவடிக்கு வெளியே வைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" என தெரிவித்தார்.

மேலும், எஸ்.ஐ.ஆர் மூலம் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரிக்குமா? என்ற கேள்விக்கு, "எப்போதும் இருப்பதை விட இந்த முறை அதிக வாக்குப்பதிவு இருக்கும்" என்றார். தொடர்ந்து, கூப்பன், காசோலைகள் மாதிரி வழங்கப்பட்டது குறித்து வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், பணப்பட்டுவாடாவை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் தெரிவித்தார்.

வரி விளம்பரங்கள்



தினத்தளம்

DHINATH DHALAM

மணமாலை | கோவில் திருவிழா | அரசியல் நிகழ்வுகள்

கல்வி | திருமண நாள் | பிறந்த நாள் | ஆண்டு விழா

திறப்பு விழா | வீட்டு சுப நிகழ்ச்சிகள் | நினைவு நாள்

ரியல் எஸ்டேட் | பைனான்ஸ் | நகைக்கடன்

வேலை வாய்ப்பு | ஆட்டோமொபைல்

தொடர்புக்கு : ☎ +919444082959

## வாக்களிக்க 12 ஆவணங்களை அடையாளமாக காட்டலாம்: தேர்தல் ஆணையம் அறிவிப்பு

சென்னை,

தமிழகத்தில் (வியாழக்கிழமை) சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. வாக்களிப்பதற்கு வசதியாக, வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள், 'இசிஐநெட்' இணையதளத்திற்கு சென்று, வாக்காளர் அடை யாள அட்டை எண்ணைபதிவுசெய்தோ அல்லது பதிவு செய் யப்பட்ட செல்போன் எண்ணை வைத்தோ புதிய டிஜிட்டல் வாக்காளர் அட்டையை 'ஓ.டி.பி.' மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

ஒருவேளை வாக்காளர் அடையாள அட்டை இல்லாவிட்டாலும் ஆதார் உள்ளிட்ட 12 மாற்று ஆவணங்களைக் காட்டி வாக்களிக்கலாம்.




அதன் விவரம் பின்வருமாறு:-

1.ஆதார் அட்டை

2.புகைப்படத்துடன் கூடிய வங்கி அல்லது தபால் கணக்குப் புத்தகங்கள்

3.மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை

4.தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை அல்லது ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை

5.ஓட்டுனர் உரிமம்

6.பான் கார்டு

7.தேசிய மக்கள் தொகைபதிவேட்டின்கீழ் இந்திய தலை மைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை

8.பாஸ்போர்ட்டு

9. புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்

10. மத்திய அல்லது மாநில அரசுகள் அல்லது பொதுத்துறை நிறுவனங்கள் அல்லது வரையறுக்கப்பட்ட பொது நிறுனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்

11.நாடாளுமன்றஅல்லது சட்டமன்ற அல்லது சட்டமேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை

12. மத்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட தனித்துவமான ஊனமுற்றோர் அடையாள அட்டை. ஆகியவற்றில் ஏதாவது ஒன்றை பயன்படுத்தி வாக்களிக்கலாம். பூத் சிலிப் என்ற வாக்காளர் தகவல் சீட்டு, வாக்களிப்பதற்கு செல்லத்தக்கதல்ல.

வாக்காளர் பட்டியலில் பெயர் இல்லாவிட்டால், இவற்றில் எந்தஆவணத்தைவைத்தும் வாக்களிக்க முடியாது.

செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்



Join my WhatsApp group.
https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

## கோவை கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியில்

# 12ம் வகுப்பு பள்ளி மாணவர்களின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில் கோடு ஸ்ட்ராம் 2026 என்ற தலைப்பில் பைதான் கோடிங் பூட் கேம்ப் நிகழ்ச்சி நடைபெற்றது

கோவை அரசூர் பகுதியில் உள்ள, கே.பி.ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியில் 12ம் வகுப்பு பள்ளி மாணவர்களின் தொழில்நுட்பத் திறன்களை மேம்படுத்தும் நோக்கில்கோடுஸ்ட்ராம் 2026 என்ற தலைப்பில் பைதான் கோடிங் பூட் கேம்ப் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்வின் தொடக்கநாளில் கல்லூரியின் முதல்வர் முனைவர் கீதா இத்தகைய பைதான் பூட்கேம்ப் மாணவர்களின் எதிர்காலத் தொழில் வாய்ப்புகளை மேம்படுத்துவதிலும் புதிய தொழில்நுட்ப உலகில் தன்னம்பிக்கையுடன் முன்னேறுவதிலும் மிக முக்கிய பங்கு வகிக்கும் என வலியுறுத்தி மாணவர்களை ஊக்கப்படுத்தினார். மேலும் இந்நிகழ்வில் பத்துக்கும் மேற்பட்ட துறை சார்ந்த வல்லுநர்கள் கலந்து கொண்டு பயிற்சி வழங்கினர். இந்நிகழ்ச்சியை கணினி அறிவியல் புல முதன்மையர் முனைவர் ரஞ்சிதா குமாரி மற்றும் முதுகலைத் தரவு அறிவியல் துறைத் தலைவர் முனைவர் சித்ரா ஆகியோர் ஒருங்கிணைத்தனர்



இப்பயிற்சி முகாமில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



ஈரோடு ஜவுளி சந்தை ஒவ்வொரு வாரம் திங்கட்கிழமை மாலை தொடங்கி செவ்வாய்க்கிழமை மாலை வரை நடைபெறும். தென்னிந்திய அளவில் ஈரோடு ஜவுளி சந்தைக்கு ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களில் இருந்து நூற்றுக்கணக்கான வியாபாரிகள் அதிக அளவில் வந்து துணிகளை கொள்முதல் செய்வார்கள். இந்நிலையில் திங்கள்கிழமை வெளி மாநில வியாபாரிகள் வராததால் ஈரோடு ஜவுளிச் சந்தை வெறிச்சோடி காணப்பட்டது.

# ஈரோடு ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாணவர்கள் உலக அளவில் முதலிடம் பிடித்து சாதனை நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் கீழ் NSS நடத்திய போட்டி

அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆய்வு மையத்தின் கீழ் NSS (National Space Society) நடத்திய சர்வதேச விண்வெளிப் போட்டியில், ஈரோடு ஸ்ரீ சைதன்யா டெக்னோ பள்ளி மாணவர்கள் உலக அளவில் முதலிடம் பிடித்து வரலாற்றுச் சாதனை படைத்துள்ளனர்.

மாணவர்களின் அறிவியல் மற்றும் படைப்பாற்றல் திறனை ஊக்குவிக்கும் வகையில், 2026-ஆம் ஆண்டிற்காக "NSS விண்வெளி குடியிருப்பு" என்னும் தலைப்பில் உலகளாவிய விண்வெளி ஆய்வுப் போட்டி நடைபெற்றது. இப்போட்டியில் இந்தியா, அமெரிக்கா, ரஷ்யா உள்ளிட்ட மொத்தம் 31 நாடுகள் பங்கேற்றன. உலகெங்கிலும் இருந்து லட்சக்கணக்கான மாணவர்கள் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகளில், பூமியைத் தவிர மற்ற கோள்களில் மனித குடியேற்றங்களை அமைப்பது குறித்த ஈரோடு மாணவர்களின் செயல்திட்டம்மிகச்சிறந்ததாகத் தேர்வு செய்யப்பட்டது.



வெற்றி பெற்ற மாணவர்கள்:

A.ஹரித், அக்சய் கீர்த்திக் A, அக்சயா ), ஜோஷிகா S.S, ஹரிகிசான் K.B, சரத் S.M, பிரணவ் கிருத்திக் K.S,ஆலன் ஜார்ஜ் L மற்றும் ஜனகன்.

ஆய்வின் பெயர்: DEMETER-PRIME

இந்த மாணவர்கள் சமர்ப்பித்த 'DEMETER-PRIME' என்ற ஆய்வுத் திட்டம், நடுவர் குழுவின் பெரும் பாராட்டைப் பெற்று, உலக அளவில் முதலிடத்தைப் பெற்றுத் தந்துள்ளது. இது இந்தியாவிற்கும், ஈரோடு மாவட்டத்திற்கும் கிடைத்த மிகப்பெரிய பெருமையாகும்.

இதனையொட்டி பள்ளியில் நடைபெற்ற பாராட்டு விழாவில், துணைப் பொது மேலாளர் வெங்கட கிருஷ்ணா ரெட்டி மற்றும் பள்ளி முதல்வர் பிரவீனா ஆகியோர் மாணவர்களுக்குப் பதக்கங்களையும், சான்றிதழ்களையும் வழங்கிப் பாராட்டினர்.

அப்போது அவர்கள் பேசுகையில்,"இந்த உலகளாவிய வெற்றி மாணவர்களின் கடின உழைப்பிற்கும், அறிவியல் ஆர்வத்திற்கும் கிடைத்த அங்கீகாரம். இது இவர்களின் எதிர்கால விண்வெளி ஆராய்ச்சிப் பயணத்திற்கு ஒரு மிகப்பெரிய படிக்கட்டாக அமையும்" எனநெகிழ்ச்சியுடன் தெரிவித்தனர். இச்சாதனைக்கு உறுதுணையாக இருந்த ஆசிரியர்களுக்கும், பெற்றோர்களுக்கும் பள்ளி நிர்வாகம் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டது.

# தமிழக சட்டபேரவை தேர்தலையொட்டி புதுச்சேரியில் 443 மதுக்கடைகளுக்கு சீல்:

புதுச்சேரி: தமிழக சட்டப்பேரவை பொதுத்தேர்தல் நாளை நடைபெறுகிறது.

தமிழகத்தை ஒட்டியுள்ள புதுச்சேரியிலும் 3 நாட்கள் (ஏப்.21 முதல் 23 வரை) மதுக்கடைகளை மூட உத்தரவிட்டது.நேற்று காலை 10 மணி முதல் மூடப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், கடந்த இரு தினங்களாக மதுக்கடைகளில் கூட்டம் அலைமோதின.

கனகசெட்டிகுளம்,மதகடிப்பட்டு, கன்னியகோயில் உள்ளிட்ட பகுதிகளில் பறக்கும் படைகள் விடியவிடிய சோதனையில் இறங்கின. இதையடுத்து, இந்த கடைகளை திறக்காமல் இருக்கும் வகையில், காலை 10 மணியிலிருந்து மதுக்கடைகளை கண்காணித்த கலால்துறை தாசில்தார் ராஜேஷ் கண்ணா தலைமையிலான 15 குழுக்களை கொண்ட அதிகாரிகள், புதுச்சேரி யிலுள்ள 443 மதுபான கடைகள், 37 மதுபான குடோன்கள் மற்றும் 83 சாராய கடைகளுக்கு அதிரடியாக சீல் வைத்தனர். இதேபோல் காரைக்கால் பிராந்தியத்தில் உள்ள மதுபான, சாராய கடைகளும் சீல் வைக்கப்பட்டது.



இருப்பினும் தடை உத்தரவை மீறி புதுச்சேரியில் ஆங்காங்கே மதுபானங்களை கள்ளத்தனமாக விற்ற 7 பேர் பிடிபட்டனர். அவர்களிடமிருந்து மதுபாட்டில்கள், சாராயம், பைக்குகள் பறிமுதல் செய்யப்பட்டன. இதேபோல் புதுச்சேரி,காரைக்கால் முழுவதும் போலீசார் தீவிர ரோந்து பணிகளில் ஈடுபட்டுள்ளனர். மதுபான, சாராய கடைகளை கலால்துறை தொடர்ந்து கண்காணித்து வருகிறது.



தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வாக்குப்பதிவு வருகின்ற ஏப்ரல் 23 ஆம் தேதி நடைபெற இருப்பதை முன்னிட்டு தென்காசி மாவட்டத்தில் தேர்தல் பாதுகாப்பு பணியில் ஈடுபடவுள்ள காவல்துறையினருக்கு ★மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.A.மயில்வாகனன் I.P.S.,★ அவர்களின் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. தேர்தலின் போது பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும், பாதுகாப்பு பணியில் ஈடுபடும் போதுபின்பற்றவேண்டியவிதிமுறைகள்குறித்தும்காவல்துறையினருக்குஅறிவுரைகள்வழங்கப்பட்டது.இந்நிகழ்ச்சியில் தென்காசி மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர்கள் மற்றும் காவல் ஆளினர்கள் கலந்து கொண்டனர்..



தமிழ்நாடுசட்டமன்றபொதுத்தேர்தல்2026வாக்குப்பதிவு23.04.2026நடைபெறவுள்ளதையொட்டிஈரோடுமாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (22.04.2026) ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குச்சாவடி மையங்களுக்கு கொண்டு செல்லும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தளவாடப்பொருட்கள் மாநகராட்சி அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறையிலிருந்து ஆயுதம் ஏந்திய காவலர்கள் பாதுகாப்புடன் ஏற்றும் பணியினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடுசட்டமன்றபொதுத்தேர்தல்2026வாக்குப்பதிவு23.04.2026நடைபெறவுள்ளதையொட்டிஈரோடுமாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (22.04.2026) ஈரோடு மேற்கு சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குச்சாவடி மையங்களுக்கு கொண்டு செல்லும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் தளவாடப்பொருட்கள் வருவாய் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு அறையிலிருந்து ஆயுதம் ஏந்திய காவலர்கள் பாதுகாப்புடன் ஏற்றும் பணி குறித்து ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 வாக்குப்பதிவு நாளை (23.04.2026) நடைபெறவுள்ளதையொட்டி ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (22.04.2026) 10 க்கும் அதிகமான வாக்குச்சாவடிகள் உள்ள மையமான ஈரோடு மாநகராட்சி, குமலன்குட்டை அரசு நடுநிலைப்பள்ளியில் உள்ள மையத்தில் வாக்காளர்கள் அவர்களது வாக்குச்சாவடிகளை எளிதில் கண்டறிந்து வாக்களிக்கச் செல்ல ஏதுவாக கலர்கோடு வரையப்பட்டு வரும் பணியினை ஆய்வு மேற்கொண்டார்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 வாக்குப்பதிவு இன்று (23.04.2026) நடைபெறவுள்ளதையொட்டி ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (22.04.2026) 10 க்கும் அதிகமான வாக்குச்சாவடிகள் உள்ள மையமான ஈரோடு மாநகராட்சி, குமலன்குட்டை அரசு நடுநிலைப்பள்ளியில் உள்ள மையத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

# கோவை தெற்கு தொகுதியில் தேர்தலை ரத்து செய்ய கோரி அதிமுக வேட்பாளர் தர்ணா



கோவை: கோவை தெற்கு தொகுதியில் தேர்தலை ரத்து செய்ய வலியுறுத்தி, மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் அதிமுக வேட்பாளர் இன்று தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டார்.

கோவை தெற்கு தொகுதியில் திமுக வேட்பாளராக முன்னாள் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி, அதிமுக வேட்பாளராக மாவட்ட செயலாளர் அம்மன் கே.அர்ச்சுணன் உள்ளிட்டோர் போட்டியிடுகின்றனர். சட்டப்பேரவைத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நாளை (ஏப்.23) நடைபெற உள்ளது.

இந்நிலையில், அதிமுக வேட்பாளர் அம்மன் கே.அர்ச்சுணன் மற்றும் நிர்வாகிகள், கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்துக்கு இன்று (ஏப்.22) வந்தனர். பின்னர், அவர்கள் ஆட்சியர் அலுவலக புதிய கட்டிடத்தின் நுழைவாயிலில் அமர்ந்து தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டனர்.பாஜகமாவட்ட தலைவர் ரமேஷ்குமார் உள்ளிட்ட கூட்டணிக் கட்சியினரும் இந்த போராட்டத்தில் கலந்து கொண்டனர். தேர்தல் நெருங்கும்வேளையில், கடந்த சில நாட்களாக கோவை தெற்கு தொகுதியில் திமுக சார்பில் வாக்காளர்களுக்கு பணம், பரிசுப் பொருட்கள் கொடுக்கப்பட்டு வருவதாகவும், அதை தடுக்க வலியுறுத்தி மனுக்கள் அளித்தாலும் மாவட்ட தேர்தல் அலுவலர் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், இதனால் கோவை தெற்கு தொகுதியில் தேர்தலை ரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்தி வேட்பாளர் அம்மன் அர்ச்சுணன் மற்றும் நிர்வாகிகள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ந்து தகவல் அறிந்து அங்கு வந்த காவல் துறையினர், போராட்டத்தில் ஈடுபட்ட அவரிடம் பேச்சு வார்த்தை நடத்தினார்.

அப்போது செய்தியாளர்களிடம் அம்மன் கே.அர்ச்சுணன் கூறும்போது, "கோவை தெற்கு தொகுதியில் தேர்தலை ரத்து செய்ய வேண்டும. கோவை தெற்கு தொகுதியில் திமுகவினர் வாக்காளர்களுக்கு வாக்குக்காக பணம் கொடுக்கின்றனர். பணம் கொடுப்பவர்களை பிடித்துக் கொடுத்தாலும், போலீஸார் நடவடிக்கை எடுப்பதில்லை" என்றார்.

# தேர்தலில் வாக்களிக்க பெங்களூருவிலிருந்து காரில் திரும்பியபோது விபத்து; 3 இளைஞர்கள் உயிரிழப்பு



ஒசூர்: கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் அருகே சானமாவு வனப்பகுதியில் நிகழ்ந்த கோர விபத்தில், பெங்களூரில் இருந்து தேர்தலில் வாக்களிக்க ஊர் சென்றுகொண்டிருந்த இளைஞர்கள் 3 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

கர்நாடக மாநிலம் பெங்களூரில் வீரமணி (25) என்பவர் சிப்ஸ் கடை நடத்தி வந்தார். அவருடன் அதே பகுதியில் உள்ள சிப்ஸ் கடைகளில் வேலைசெய்து வந்த பிரதீப் மற்றும் மாரி, சதீஷ் குமார் ஆகியோர் தமிழகத்தில் நடைபெற்றவரும் சட்டமன்றத் தேர்தலில் வாக்களிப்பதற்காக தங்களது சொந்த ஊரான பென்னாகரத்திற்கு காரில்புறப்பட்டுள்ளனர். அதிகாலை சுமார் 4 மணி அளவில், ஒசூர் அருகே உள்ள சானமாவு வனப்பகுதி வழியாக கார் சென்று கொண்டிருந்தது. அப்போது உடுமலைபேட்டையில் இருந்து ஒசூர் நோக்கி வந்த தனியார் சொகுசு பேருந்தும், காரும் எதிர்பாராதவிதமாக நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானது. கார் அப்பளம் போல் நொறுங்கியது. காரில் பயணம் செய்த வீரமணி (25), பிரதீப், மாரி ஆகிய மூன்று இளைஞர்களும் சம்பவ இடத்திலேயே உடல் நசுங்கி உயிரிழந்தனர். இவர்களுடன் பயணித்த சதீஷ் குமார் (25) என்பவர் பலத்த காயங்களுடன் உயிர் தப்பினார். அவர் தற்போது சிகிச்சைக்காக ஒசூர் அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து குறித்து தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த உத்தனப் பள்ளி போலீஸார், உயிரிழந்தவர்களின் உடல்களைக் கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஒசூர் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், விபத்து குறித்து வழக்குப் பதிவு செய்து விபத்துக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். தேர்தலில் வாக்களிக்க ஆர்வத்துடன் ஊருக்குச்சென்ற இளைஞர்கள் விபத்தில் சிக்கி உயிரிழந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# பிரிட்டனில் இனி 2008க்கு பின் பிறந்தவர்கள் சிகரெட் வாங்க வாழ்நாள் தடை



புதுடெல்லி: 2008-ஆம் ஆண்டுக்குப் பிறகு பிறந்தவர்கள் சிகரெட் வாங்க வாழ்நாள் தடையைக் கொண்டுவரும் மசோதா ஒன்று பிரிட்டன் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. புகைப்பழக்கமில்லா தலைமுறையை உருவாக்க இந்தப் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

பிரிட்டனில் 17 வயது மற்றும் அதற்குக் குறைந்த வயதுடையவர்கள் சிகரெட் வாங்குவதைத் தடை செய்யும் மசோதாவுக்கு பிரிட்டன் நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் ஒப்புதல் அளித்துள்ளன. இதன்படி, 2009-ஆம் ஆண்டு ஜனவரி 1-ஆம் தேதிக்குக்குப் பிறகு பிறந்தவர்கள் யாரும் (தற்போது 17 வயதானவர்கள்) சிகரெட் வாங்க முடியாது. பிரிட்டனின் இந்த மசோதாவுக்கு புகையிலை மற்றும் வேப்ஸ் எனப்பெயரிடப்பட்டுள்ளது.இது குறித்து சுகாதாரத்துறைஅமைச்சர் வெஸ் ஸ்ட்ரீட்டிங் கூறும்போது, "நாட்டின் சுகாதார வரலாற்றில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க தருணம். இது புகைப்பழக்கமற்ற முதல் தலைமுறையை உருவாக்க வழிவகுக்கும்" என்றும் தெரிவித்துள்ளார்.

முன்னதாக, 2022-ஆம் ஆண்டில், புகைப்பிடித்தலுக்கு எதிராக இத்தகைய சட்டத்தை இயற்றிய முதல் நாடாக நியூசிலாந்து திகழ்ந்தது. இச்சட்டத்தின் மூலம், 2008-க்குப் பிறகு பிறந்தவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்வது தடை செய்யப்பட்டது.

ஆனால், இச்சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட ஓராண்டுக்கும் குறைவான காலத்திலேயே, நவம்பர் 2023-ல் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் ரத்து செய்தது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதத்தில், 2007-ஆம் ஆண்டு ஜனவரி 1-க்குப் பிறகு பிறந்த எவருக்கும் சிகரெட் விற்பனை செய்வதை மாலத்தீவு தடை செய்தது குறிப்பிடத்தக்கது.

# தடுப்பு காவலில் சிறையில் உள்ள கைதிகளுக்கு வாக்களிக்க உரிமை இல்லை; நீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் திட்டவட்டம்



சென்னை: நாடு கடத்தல்மற்றும்தடுப்புகாவல் பிரிவில் சிறையில் அடைக்கப்பட்டுள்ள கைதிகளுக்கு வாக்களிக்க உரிமை இல்லை என தேர்தல் ஆணையம் சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளது.

திருநெல்வேலியை சேர்ந்த பிரபல ரவுடி ஹரிநாடாரை கடந்த ஜனவரி 8-ம்தேதி காவல் துறை கைது செய்து புழல் சிறையில் அடைத்துள்ளனர். பின்னர், ஜனவரி 26-ம் தேதி அவர் மீது குண்டர் சட்டம் போடப்பட்டது. இதையடுத்து, புழல் சிறையில் விசாரணை கைதியாக உள்ள தனக்கு வாக்களிக்க உரிய ஏற்பாடுகளை செய்து தர காவல் துறைக்கு உத்தரவிட வேண்டும் என்று ஹரிநாடார் சென்னை உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார்.

அதில், 'தன் மீது போடப்பட்ட எந்த வழக்கிலும் இதுவரை தண்டனை விதிக்கப்படவில்லை. எனவே நடைபெற உள்ள 2026 சட்டமன்ற தேர்தலில் தனது வாக்கை பதிவை செய்ய சிறையில் அதற்கான ஏற்பாடுகளை செய்ய வேண்டும் என சிறை நிர்வாகத்துக்கு கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. ஆனால், குறைவான கால அவகாசமே இருப்பதால் அதற்கான ஏற்பாடுகளை செய்து தர முடியாது என்று புழல் சிறை நிர்வாகம் தெரிவித்துவிட்டது.

தன்னை போல தமிழகம் முழுவதும் பல்வேறு சிறைகளில் 40 ஆயிரம் விசாரணை கைதிகள் உள்ளனர். அதில் குண்டர் சட்டத்தில் மட்டும் 2 ஆயிரம் கைதிகள் அடைக்கப்பட்டுள்ளனர். நான் உட்பட அவர்கள் அனைவரும் வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் தகுந்த ஏற்பாடுகளைசெய்துதரசிறைத் துறைக்கு உத்தரவிட வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்த வழக்கு உயர்நீதிமன்றதலைமைநீதிபதி எஸ்.ஏ தர்மாதிகாரி, நீதிபதி அருள்முருகன் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, ஹரிநாடார் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் மகாவீர் சிவாஜி, "குண்டர் சட்டத்தில் சுமார் 2,000 கைதிகள் சிறையில் உள்ளனர். 100 சதவிகிதம் வாக்குப்பதிவு செய்ய வேண்டும் என்பதை தேர்தல் ஆணையம் குறிக்கோளாக கொண்டுள்ளது. இந்த இலக்கை அடைய சிறை கைதிகளை வாக்களிக்க அனுமதிக்க வேண்டும்" என்று வாதாடினார்.

காவல்துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், "ஹரிநாடார் மீது தற்போது 3 வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவர் மீது குண்டர் சட்டமும் போடப்பட்டுள்ளது. மக்கள் பிரதிநிதித்துவ சட்டம் 62-ன் படி தடுப்பு காவல் கைதிக்கு வாக்களிக்க உரிமை இல்லை என்பதை உச்சநீதிமன்றமும் உறுதி செய்துள்ளது" என்று தெரிவித்தார்.

தேர்தல் ஆணையம் தரப்பில், "விசாரணை கைதிகள் மட்டுமேவாக்களிக்க சிறையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மற்ற கைதிகளுக்கு வாக்களிக்க உரிமை இல்லை என்பதை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளதால் அதற்கான ஏற்பாடுகளை செய்யவில்லை" என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்துவழக்கை விசாரித்த நீதிபதிகள், "நாடு கடத்தல் மற்றும் தடுப்பு காவல் கைதிகளுக்கு வாக்களிக்க உரிமை இல்லை என்பதை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ள நிலையில், அவர்கள் வாக்களிக்க உரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமென உத்தரவிட முடியாது" என்று தெரிவித்து வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# அமெரிக்கா ஈரான் போர் நிறுத்தம் நீட்டிப்பு: ட்ரம்ப் அறிவிப்பு



வாஷிங்டன்: அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இடைக்கால போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனல்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

கடந்த பிப்.28-ம் தேதி ஈரான் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் படைகள் தாக்குதல் நடத்தின. இதைத்தொடர்ந்து இஸ்ரேல் மற்றும் வளைகுடாவில் உள்ள அமெரிக்க நேச நாடுகள் மீது ஈரான் பதில் தாக்குதல் நடத்தியது. ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டதால் சர்வதேச அளவில் கச்சா எண்ணெய் விநியோகம் பாதிக்கப்பட்டது. இந்நிலையில், அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே இரண்டு வார கால போர் நிறுத்தம் அறிவிக்கப்பட்டது. இந்த போர் நிறுத்தம் இன்றுடன் (ஏப்.22)நிறைவடைகிறது.

இந்த சூழலில் ட்ரம்ப் இதனைநீட்டித்துள்ளார். இது தொடர்பாக ட்ரூத் சோஷியல் சமூக வலைதளத்தில் ட்ரம்ப் பதிவிட்டுள்ளார். "ஈரான் உடனான போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுகிறது. அமைதி ஒப்பந்தம் சார்ந்து ஒருங்கிணைந்த முன்மொழிவை ஈரான் முன்வைக்கும் வரையில் இந்த போர் நிறுத்தம் தொடரும். அதே நேரத்தில் ஈரான் துறைமுகங்கள் முற்றுகையிட்டுள்ள அமெரிக்க ராணுவத்தின் பணியை தொடர்ந்து மேற்கொள்ளுமாறு நான் கூறியுள்ளேன்," என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

போர் நிறுத்தம் நீட்டிக்கப்பட்டதை பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீஃப் வரவேற்றுள்ளார். இருப்பினும் இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தை மேற்கொள்ள அமெரிக்க துணை அதிபர் ஜே.டி. வான்ஸ், பாகிஸ்தான் செல்ல இருந்த திட்டத்தை ஒத்திவைத்துள்ளதாக அமெரிக்க அரசு கூறியுள்ளது. இரண்டாம் கட்ட அமைதிப் பேச்சுவார்த்தையை மேற்கொள்ளும் நடவடிக்கையை பாகிஸ்தான் மேற்கொண்டது. அதை ஈரான் நிராகரித்து வருகிறது. முன்னதாக, ஈரானுடனான போர் நிறுத்தத்தை நீட்டிக்க அமெரிக்கா விரும்பவில்லை என அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சொல்லியிருந்தார். இது தொடர்பாக செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியில் தெளிவாக விளக்கமளித்தார். ஈரானோடு ஒப்பந்தம் ஏதும் ஏற்படவில்லை என்றால் மீண்டும் தங்கள் தரப்பு தாக்குதலை தொடங்கும் என அவர் தெரிவித்திருந்தார்.

# பெல்ஜியத்தில் இருந்து சென்னை திரும்பினார் நடிகரும், ரேஸருமான அஜித்குமார்!



சென்னை: பெல்ஜியத்தில் இருந்து நடிகரும், ரேஸருமான அஜித்குமார் சென்னை திரும்பினார். அஜித் கடந்த ஒரு வருடத்திற்கும் மேலாக கார் ரேஸில் தான் தீவிர கவனம் செலுத்தி வருகிறார். அதற்காகவே அவரது அடுத்த பட ஷூட்டிங்கும் தொடங்கப்படாமல் இருக்கிறது. இந்நிலையில், உலகின் சவாலான கார் பந்தயங்களில் ஒன்றான 24H Series-இல் அஜித்குமார் ரேஸிங் அணி கலந்து கொண்டு இராண்டாம் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளது.இதற்காக அஜித்துக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றனர். அஜித் டீம் உடன் கொண்டாடிய வீடியோவும் வெளியாகி இருக்கிறது.

அஜித் போடியம் மீது இந்திய கொடியுடன் ஏறி நின்றிருக்கி றார். கோப்பை உடன் வெற்றியை அவர்கள் கொண்டாடி இருக்கும் புகைப்படங்கள் வைரலாகி ரசிகர்கள் இடையே பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இந்நிலையில், பெல்ஜியத்தில் இருந்து நடிகரும், ரேஸருமான அஜித்குமார் இன்று சென்னை திரும்பினார். தமிழக சட்டசபை தேர்தல் நாளை நடைபெறவுள்ள நிலையில், தனது ஜனநாயக கடமையை நிறைவேற்றுவதற்காக அவர் சென்னை திரும்பி உள்ளார்.

# நீட் தேர்வுக்கான ஹால் டிக்கெட் வருகிற 26ம் தேதி வெளியீடு: தேசிய தேர்வு முகமை அறிவிப்பு




டெல்லி: நீட்தேர்வுக்கானஹால் டிக்கெட் வருகிற 26ம் தேதி வெளியாகும் என தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. மேலும் "மாணவர்களின் நலன் கருதி நீண்ட தொலைவில் இல்லாமல் அவர்கள் விருப்பத்தின்படி நகரங்கள் ஒதுக்கீடு. மே மாதம் 3ம் தேதி நாடு முழுவதும் நீட் தேர்வு நடைபெறுகிறது, 99.2 % மாணவர்களுக்கு அவர்களின் விருப்பத்தின் அடிப்படையில் தேர்வு மையம் அமைந்துள்ள நகரம் ஒதுக்கீடு" என தேசிய தேர்வுமுகமைதெரிவித்துள்ளது.

# ஹார்முஸ் ஜலசந்தியில் 2 கப்பல்கள் மீது ஈரான் தாக்குதல்

## அமைதிப் பேச்சு தொடங்குவதில் சிக்கல்

தெஹ்ரான்: போரை முடிவுக்குக்கொண்டுவருவதற்கான அமெரிக்கா - ஈரானுக்கு இடையிலான பேச்சுவார்த்தைக்கு சிக்கலை ஏற்படுத்தும்வகையில்,இன்று ஹார்முஸ் ஜலசந்தியில் இரண்டு கப்பல்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பிரிட்டிஷ் ராணுவம் தெரிவித்துள்ளது.



அமெரிக்கா மற்றும் ஈரான் இடையிலான இடைக்கால போர் நிறுத்தம் நீட்டிக்கப்படுவதாக அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப் அறிவித்துள்ளார். போர் நிறுத்த நீட்டிப்பு குறித்த ட்ரம்ப்பின் அறிவிப்புக்கு ஈரான் இன்னும் பதிலளிக்கவில்லை. அதேநேரத்தில், உடன்பாடு எட்டப்படாவிட்டால் மீண்டும் சண்டையைத் தொடங்கத் தயாராக இருப்பதாக இரு நாடுகளும் எச்சரித்துள்ளன.

இந்தச் சூழலில், பிரிட்டிஷ் ராணுவத்தின் கடல்சார் வர்த்தக செயல்பாடுகள் (UKMTO) மையம், ஈரானின் துணை ராணுவப் படையான புரட்சிகர காவலர் படை (IRGC), இன்று காலை 7:55 மணியளவில் ஹார்முஸ் ஜலசந்தியில் ஒரு சரக்கு கப்பலைத் தாக்கி சேதப்படுத்தியதாக தெரிவித்தது.

துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு முன்பு ஈரான் ராணுவம், கப்பலுக்கு எச்சரிக்கை விடுக்கவில்லை என்றும் பிரிட்டிஷ் ராணுவம் கூறியது.

அதிர்ஷ்டவசமாக, இந்தச் சம்பவத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. மேலும் இந்தத் தாக்குதலால் எந்தச் சேதமும் ஏற்படவில்லை.

இரண்டாவதாக ஒரு சரக்குக் கப்பல் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு கடலில் நிறுத்தப்பட்டதாக பிரிட்டிஷ் ராணுவம் தெரிவித்தது. அந்தக் கப்பலுக்கும் எந்தச் சேதமும் ஏற்படவில்லை என்று அறிவித்துள்ளது. முன்னதாக,கடந்த 19-ல் ஹார்முஸ் ஜலசந்தி பகுதியில் ஈரானின் தவுஸ்கா சரக்கு கப்பலை அமெரிக்க கடற்படை கைப்பற்றியது. இதைத் தொடர்ந்து டிபானி என்று பெயரிடப்பட்ட மற்றொரு ஈரானிய எண்ணெய் கப்பலை அமெரிக்க கடற்படை நேற்று கைப்பற்றியது. இதையடுத்து, ஈரானின் சரக்கு,எண்ணெய் கப்பல்களை கைப்பற்றுவது போர் நிறுத்த மீறல் ஆகும்என்று அந்தநாட்டு தலைவர்கள் குற்றம் சாட்டி வருகின்றனர்.

கடந்த பிப்ரவரி 28-ம் தேதி முதல் அமெரிக்கா இஸ்ரேல் கூட்டுப் படைகள் ஈரான் மீது தாக்குதல் நடத்திவருகின்றன.ஈரானும் இஸ்ரேல் மற்றும் வளைகுடா பகுதிகளில் உள்ள அமெரிக்க ராணுவ தளங்கள் மீது தாக்குதல் நடத்தியது. கடந்த 8-ம் தேதி இருதரப்புக்கு இடையே 2 வாரங்களுக்கு போர் நிறுத்தம் அமல் செய்யப்பட்டது. இதனிடையே கடந்த 11, 12-ம் தேதிகளில் அமெரிக்கா - ஈரான் பிரதிநிதிகள் இடையே பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை நடைபெற்றது. இந்த பேச்சு வார்த்தை தோல்வியில் முடிந்தது.

இதைத் தொடர்ந்து இஸ்லாமாபாத்தில் 2-ம் சுற்று பேச்சுவார்த்தையை நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

அணு ஆயுதம், ஹார்முஸ் ஜலசந்தி கட்டுப்பாடு, லெபனான் போர் நிறுத்தம் உள்ளிட்ட விவகாரங்களில் இருதரப்புக்கும் இடையே ஒருமித்த கருத்து எட்டப்படவில்லை. இதனால் 2-ம் சுற்று பேச்சு வார்த்தை தள்ளி வைக்கப்பட்டு வருகிறது கவனிக்கதக்கது.

# திருச்சூர் வெடி விபத்து: விசாரணை ஆணையம் அமைத்தது கேரள அரசு

திருச்சூர்:கேரள மாநிலம் திருச்சூர் அருகே பட்டாசு தொழிற்சாலையில்ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி 13 பேர் உயிரிழந்த நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பாக நீதிபதி சி.என்.ராமச்சந்திரன் நாயர் தலைமையில் ஒரு நபர் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளதாக முதல்வர் அலுவலகம் தெரிவித்துள்ளது.



கேரள மாநிலம் திருச்சூர் மாவட்டம் முண்டத்திகோடு பகுதியில் பட்டாசுத் தொழிற்சாலை உள்ளது. திருச்சூர் மாவட்டத்தில் ஆடிப் பூரம் திருவிழா மிகவும் விமரிசையாக நடைபெறும். அப்போது வாண வேடிக்கைகள் அதிக அளவில் நடைபெறும். அதற்காக இந்தத் தொழிற்சாலையில் பட்டாசு தயாரிக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வந்தன. நேற்று தொழிற்சாலையில் 65-க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை பார்த்துக்கொண்டிருந்தபோது, ஆலையில் வெடி விபத்து ஏற்பட்டு பட்டாசுகள் வெடித்துச் சிதறின.

இதையடுத்து அங்கிருந்த தொழிலாளர்கள் அலறியடித்துக் கொண்டு ஓடினர். இதில் 13 தொழிலாளர்கள் உடல் சிதறி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 40 பேர் காயமடைந்து திருச்சூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். திருச்சூர் போலீஸார் விசாரித்து வருகின்றனர். இதனிடையே, விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கும் காயமடைந்தவர்களுக்கும் நிதி உதவியை மாநில அரசு அறிவித்துள்ளது.

இது தொடர்பான அமைச்சரவை ஆலோசனைக் கூட்டம் கேரள முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் நடைபெற்றது. இதையடுத்து முதல்வர் அலுவலகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், 'உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு உடனடி நிதி உதவியாக தலா ரூ.14 லட்சம் வழங்கப்படும். இதில்,மாநில பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ரூ. 4 லட்சமும், முதல்வரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ. 10 லட்சமும் வழங்கப்படும்.

காயமடைந்தவர்களுக்கு பேரிடர் நிவாரண நிதியோடு முதல்வரின் பொது நிவாரண நிதியில் இருந்து ரூ.2 லட்சம் வழங்கப்படும். காயமடைந்தவர்கள் அரசு அல்லது தனியார் மருத்துவமனையில் பெறும் சிகிச்சைக்கானசெலவை ஆறு மாதங்களுக்கு அரசே ஏற்கும்.

மேலும்,இந்த சம்பவம் தொடர்பாக நீதிபதி சி. என். ராமச்சந்திரன் நாயர் தலைமையில் ஒரு நபர்ஆணையம்அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையம் விபத்து குறித்து விசாரணை மேற்கொள்ளும்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் குறித்து செய்தியாளர்களிடம் பேசிய டிஜிபி ரவாடா சந்திரசேகர், "உயிரிழந்தவர்களில் 5 பேரின் உடல்கள், அவர்களின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுவிட்டன. இரண்டு உடல்கள் அடையாளம் காணப்பட வேண்டிய நிலையில் உள்ளன. இந்த சம்பவம் குறித்து விசாரிக்க ஒரு சிறப்பு புலனாய்வுக் குழுவை நாங்கள் அமைத்துள்ளோம். தீ விபத்துக்கான காரணம் குறித்து நாங்கள் விரிவாக ஆராய்வோம்.விபத்து குறித்தும் அதில் பயன்படுத்தப்பட்ட வேதிப்பொருட்கள் குறித்தும் ஆய்வு செய்ய தடயவியல் குழு ஒன்றை நாங்கள் நியமித்துள்ளோம். விபத்தில் இருந்து உயிர் பிழைத்தவர்களிடமும் நாங்கள் விசாரணை நடத்த உள்ளோம். இந்த விசாரணையை முன்னெடுத்துச் செல்ல திருச்சூர் குற்றப்பிரிவு உதவி ஆணையரின் தலைமையில் மொத்தம் 18 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன" என தெரிவித்தார்.

# சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிப்பதற்காக வெளிநாடுகளில் இருந்து தமிழகம் திரும்பும் மக்கள்

சென்னை: வேலைக்காகவெளிநாடுகளுக்கு சென்றவர்கள் சட்டப்பேரவை தேர்தலில் வாக்களிப்பதற்காக, விமானங்கள் மூலம் தமிழகம் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். தமிழகத்தில் சட்டப்பேரவை தேர்தல் நாளை நடைபெறவுள்ளது.



இந்த தேர்தலில் 5.73 கோடி பேர் வாக்களிக்க உள்ளனர். இதற்கிடையில், வேலைக்காக வெளிநாடுகளுக்கு சென்றுள்ள தமிழகத்தைச் சேர்ந்தவர்கள் குழுவாகவும், தனித்தனியாகவும் விமானம் மூலம் தமிழகம் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். வெளிநாடுகளில் இருந்து சென்னைக்கு தினமும் 8 ஆயிரம் முதல் 8,500 பயணிகள் வருவது வழக்கம். ஆனால் கடந்த சில நாட்களாக சென்னைவரும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளன.

வெளிநாடுகளில் இருந்தாலும் தங்களுடைய ஜனநாயகக் கடமையை ஆற்றவேண்டும் என்பதற்காகமக்கள் வருவது தேர்தல் ஆணைய அதிகாரிகளை ஆச்சரியமடைய வைத்துள்ளது.

# இலங்கையில் விடுதலை செய்யப்பட்ட 19 மீனவர்கள் சென்னை வருகை

சென்னை: இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டிருந்த ராமேஸ்வரத்தை சேர்ந்த 19 மீனவர்கள் விடுவிக்கப்பட்ட நிலையில், அவர்கள் சென்னை வந்தடைந்தனர்.



ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரத்தில் உள்ள பாம்பன் மற்றும்தங்கச்சிமடத்தை சேர்ந்த 19 மீனவர்கள், கடந்த பிப்ரவரி 26ஆம் தேதி இரண்டு விசைப்படகுகளில் கடலுக்கு மீன் பிடிக்கச் சென்றனர். மீனவர்கள் அனைவரும் நடுக்கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது நள்ளிரவில் அங்கு ரோந்து வந்த இலங்கை கடலோர காவல்படையினர்,எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி தமிழக மீனவர்கள் 19 பேரை கைது செய்தனர்.

மேலும், அவர்களின் விசைப்படகுகள், மீன்பிடி வலைகள், பிடித்து வைக்கப்பட்டிருந்த மீன்கள் என அனைத்தையும் பறிமுதல் செய்து இலங்கைக்கு கொண்டு சென்றனர்.பின்னர் அவர்களை இலங்கை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த மீனவர்களின் குடும்பத்தினர், அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி தமிழக அரசிடம் தொடர்ந்து வேண்டுகோள் விடுத்து வந்தனர். இதையடுத்து, கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவித்து அவர்களின் படகுகளையும் மீட்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என பிரதமர் மற்றும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவசர கடிதம் ஒன்றை எழுதினார்.

இதனைத் தொடர்ந்து, இலங்கையில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள், அந்நாட்டு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர். இந்நிலையில், இலங்கை சிறையில் அடைக்கப்பட்டிருந்த 19 மீனவர்களையும், சில நாட்களுக்கு முன்பு நீதிமன்றம் விடுதலைசெய்தது. அவர்கள் இலங்கையில் உள்ள இந்தியத்தூதரக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். பின்னர், மீனவர்களை தங்களது பாதுகாப்பில் வைத்துக் கொண்ட தூதரகம்,அவர்களுக்கு தேவையான உதவிகளையும் செய்தனர். மேலும், மீனவர்கள் அனைவரையும் தமிழ்நாடு அனுப்பி வைக்க தேவையான நடவடிக்கைகளை இந்திய தூதரக அதிகாரிகள் மேற்கொண்டனர்.

அப்போது, மீனவர்களுக்கு பாஸ்போர்ட் இல்லாத காரணத்தால், எமர்ஜென்சி சர்டிபிகேட் தயார் செய்தனர். தொடர்ந்து, நேற்று (ஏப்.21) காலை கொழும்புவில் இருந்து சென்னை வந்த இண்டிகோ ஏர்லைன்ஸ் விமானத்தில் 19 மீனவர்களையும் சென்னைக்கு அனுப்பி வைத்தனர். விமானம் மூலம் சென்னை வந்தடைந்த 19 மீனவர்களையும் வரவேற்ற தமிழ்நாடு மீன்வளத்துறை அதிகாரிகள், அவர்களை அரசு ஏற்பாடு செய்திருந்த வாகனத்தில் சொந்த ஊரான ராமேஸ்வரத்திற்கு அனுப்பி வைத்தனர்.

# கரூர் கிருஷ்ணராயபுரம் தொகுதியில் விநியோகிக்க வைத்திருந்த 52 குக்கர்கள் பறிமுதல்

கரூர்:கிருஷ்ணராயபுரம் தொகுதி புலியூரில் அதிமுக வேட்பாளருக்கு ஆதரவாக குக்கர் விநியோகம் செய்யப்படுவதாக கிடைத்த தகவலை அடுத்து, விசாரணை மேற்கொண்ட பறக்கும் படையை கண்டதும் சம்பந்தப்பட்டவர்கள் குக்கர்களை கீழே போட்டுவிட்டு ஓட்டம் பிடித்தனர். தப்பிடியோடியவர்கள் குறித்து போலீஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.



கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் (தனி) தொகுதியில் அதிமுக வேட்பாளராக மருத்துவர் எஸ். திவ்யா போட்டியிடுகிறார். அவருக்கு ஆதரவாக புலியூர் பகுதியில் இன்று (ஏப்.22) வீடு, வீடாக வாக்காளர்களுக்கு குக்கர் வழங்கப்பட்டு வருவதாக பறக்கும் படையினருக்கு தகவல் கிடைத்தது. பறக்கும் படையினர் சம்பவ இடத்துக்குச் சென்ற நிலையில், குக்கர்களை விநியோகம் செய்தவர்கள் புலியூர்கிராமநிர்வாக அலுவலர் அலுவலகம் இருக்கும்தனியார்தோட்டத்துக்குள் 52 குக்கர்களை போட்டுவிட்டு தப்பியோடி விட்டனர்.

இதையடுத்து, பறக்கும் படையினர் 52 குக்கர்களை பறிமுதல் செய்து மினி வேனில் ஏற்றி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு அனுப்பி வைத்து தப்பிடியோடியவர்கள் குறித்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மேலும்,புரவிபாளையம் பகுதியில் ஒரு வீட்டில் 100 குக்கர் பதுக்கி வைக்கப்பட்டிருப்பதாக வந்த தகவலை அடுத்து அங்கு சோதனையிட சென்றனர். வீடு பூட்டப்பட்டிருந்ததால் அங்க சோதனை நடத்த காத்திருந்தனர்.

அப்போது அப்பகுதியைச் சேர்ந்தவர்கள், 'இங்கு மட்டும்தான் சோதனையிடுவீர்களா? வேறு சில இடங்களில் வேட்டி, சேலை வழங்குகின்றனர்.

அங்கு சோதனையிட மாட்டீர்களா?' என வாக்குவாதம் செய்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

# அரசுப் பேருந்து ஓட்டுநர்களை வேறு பணிகளில் ஈடுபடுத்துவதை தடுக்கக் கோரி வழக்கு: போக்குவரத்து துறை பதிலளிக்க உத்தரவு



மதுரை: அரசுப் பேருந்து ஓட்டுநர், நடத்துநர்களை வேறு பணிகளில் ஈடுபடுத்துவதை தடுக்கக்கோரிய வழக்கில் போக்குவரத்துத் துறைபதில் மனு தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில போக்குவரத்து ஊழியர் கூட்டமைப்பு சார்பில், உயர்நீதிமன்றஅமர்வில் தாக்கல்செய்தமனு:அரசுப் போக்குவரத்து கழகங்களில் பணிபுரியும் ஓட்டுநர்கள் மற்றும் நடத்துநர்களை அவர்களுக்கான பணிகளைச் செய்யாமல், அலுவலக வேலை உள்ளிட்ட வேறு பணிகளில் ஈடுபடுத்தி சம்பளம் வழங்குவது சட்டவிரோதம். மேலும், 2018-ம் ஆண்டு வெளியிடப்பட்ட அரசாணைகள் மற்றும் 1995, 2005 ஒப்பந்தங்களின்படி, ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களை பிற பணிகளில் ஈடுபடுத்தப்படக்கூடாது. ஆயிரக்கணக்கான பணியாளர்கள் "வேறு பணிகளில்" இருப்பதால், பணிச்சுமை அதிகரித்து, மீதமுள்ள பணியாளர்கள் அதிக நேரம் வேலை செய்யும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, ஓட்டுநர் மற்றும் நடத்துநர்களை அவர்களது இயல்பான பணிகளில் மட்டுமே ஈடுபடுத்த உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு மனுவில் கூறப்பட்டுருந்தது. இந்த மனு நீதிபதிகள் சதீஷ் குமார், ஜோதி ராமன் முன்பு விசாரணைக்கு வந்தது. பின்னர் நீதிபதிகள், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் நிர்வாக இயக்குநர்கள் பதிலளிக்க உத்தரவிட்டு விசாரணையை ஒத்திவைத்தனர்.

# 'Cannot put democracy in jeopardy': Supreme Court raps Mamata Banerjee over IPAC raid

*"This is, per se, an action by an individual who happens to be the CM who has used the entire system to put democracy in jeopardy," the top court told Banerjee after stating that a chief minister of any state cannot storm the premises in the midst of an investigation.*



*In a March hearing, the Supreme Court stated that the TMC supremo's interference in the ED raid was "not a happy situation."*

*The ED raid, held in January over allegations of money laundering, became a political flashpoint after Banerjee stormed into Jain's residence during the raid. The central agency has alleged that the TMC leader removed key evidence from the site.*

*The Supreme Court's hearing also comes at a time when West Bengal prepares to go to the polls. The eastern state is set to vote in two phases on April 23 and April 29. The main contest for the state assembly is between the ruling Trinamool Congress and the opposition Bharatiya Janata Party (BJP). What did the Supreme Court say?*

*The matter was heard by a bench of Justices PK Mishra and NV Anjaria. During the hearing, the bench stated that such actions from a chief minister harm democracy. The top court, as per Bar and Bench, further added that no one would have thought such a situation would occur.*

*"You have taken us through Seervai, Ambedkar, but none of them would have conceived this situation in this country that one day a sitting Chief Minister will walk into the office," the top court remarked.*

*The courton Wednesday continued hearing the ED's petition, which seeks a probe by the Central Bureau of Investigation into allegations against Mamata Banerjee and other associates.*

*The Supreme Court also stated that the case before it is "extraordinary", given the current realities in Bengal. "We cannot shut our eyes to the reality of what's happening. We cannot lose sight of the practical situation which is present in the State. Don't compel us to make observations. This is not a litigation between Ram vs Shyam. This is an extraordinary situation where the contours are totally different. Court has to take decision keeping in view socio-political realities. It is an ever evolving process," the Bench was quoted as saying by Bar and Bench.*

*What is the case?*

*On January 8, West Bengal chief minister Mamata Banerjee stormed into the residence of I-PAC co-founder Pratik Jain in the midst of an ED raid.*

*Banerjee has been accused of removing several documents and electronic devices from the locations amid the raid. While she has denied the allegations against her, the TMC leader has stated that the documents she took were related to Trinamool Congress and not the money laundering charges, given that I-PAC has been the party's political consultant for the 2019 Lok Sabha elections.*

*She further accused the central agency of acting on "political vendetta."*

*However, the ED has maintained it was acting as part of its investigation in the 2020 money laundering and coal smuggling scam linked to businessman Anup Majee.*

*I-PAC co-founder Vinesh Chandel was also recently arrested by the ED for his alleged involvement in the coal scam.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.